(6 pages) **Reg. No. :** ......................................

**Code No. : 5353** **Sub. Code : PTLM 41**

M.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2021.

Fourth Semester

தமிழ் — Core

பண்டை இலக்கியம்

(For those who joined in July 2017 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்

   நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர' — யார் கூற்று?

   (அ) தலைவி (ஆ) தோழி

   (இ) நற்றாய் (ஈ) செவிலி

2. களவன் வளை அமைந்த இடம்

   (அ) முள்ளிச்செடி வேர்

   (ஆ) செந்நெல் வேர்

   (இ) வயலைக்கொடி வேர்

   (ஈ) வள்ளைக்கொடி வேர்

3. தன்பிள்ளையைத் தான் திண்ணும் உயிரினம்?

(அ) நண்டு (ஆ) பாம்பு

(இ) முதலை (ஈ) குருகு

4. ‘கொள்ளை’ என்பதன் பொருள் யாது?

(அ) விலை (ஆ) வழி

(இ) காற்று (ஈ) கடல்

5. அகநானூற்றில் தலைவியின் அழகு எந்நகருடன் ஒப்பிடப்பட்டுள்ளது?

(அ) தொண்டி (ஆ) பூம்பட்டினம்

(இ) வஞ்சி (ஈ) கொற்கை

6. உழவர் உழாதன நான்கு பயன் உடைய நாடு

(அ) பாரியது பறம்பு (ஆ) பாண்டியநாடு

(இ) சேரநாடு (ஈ) சோழநாடு

7. திருமறு மார்பன் யார்?

(அ) திருமால் (ஆ) பிரம்மா

(இ) சிவன் (ஈ) இந்திரன்

8. முத்துக்கள் கிடைக்கும் இடம்

(அ) கொற்கை (ஆ) தலையாலங்கானம்

(இ) புகார் (ஈ) வெள்ளிமலை

9. விறலியின் பாதத்திற்கு உவமையாக அமைவது

(அ) இரும்பிடித் தடக்கை

(ஆ) களிச் சுரும்பு

(இ) உயங்கு நாய்நா

(ஈ) மடமான்

10. "நேர்இறை முன்கை பற்றி நுமர்தர

நாடுஅறி நன்மணம் அயர்கம்" இக்கூற்று இடம் பெற்ற நூல்

(அ) அகநானூறு (ஆ) நற்றிணை

(இ) கலித்தொகை (ஈ) குறிஞ்சிப்பாட்டு

பகுதி ஆ — $(5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

11. (அ) பண்டை இலக்கியங்களில் காணலாகும் திணை அமைப்பு முறையை விளக்குக.

(அல்லது)

(ஆ) சமூக அடிப்படையில் திணைக்கோட்பாடுகள் அமைந்துள்ள விதத்தினை சங்கப்பாடல்கள் வழி விவரி.

12. (அ) நற்றிணையில் உடன்போக்கு குறித்த செய்திகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) கடிநகர் சென்று வந்த செவிலி நற்றாய்க்குக் கூறியனவற்றை எழுதுக.

13. (அ) பகற்குறி வந்த தலைவனிடம் அகநானூற்றுத் தோழி கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) வேள் பாரியை கபிலர் பாடியதனை எழுதுக.

14. (அ) எட்டாம்பத்தின் பதிகத்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) பாண்டியர் பரம்பரை மற்றும் நால்வகைப் படையினை விவரி.

15. (அ) குறிஞ்சிப்பாட்டில் தலைவன் தலைவி சந்திப்பினை விவரி.

(அல்லது)

(ஆ) கடையேழு வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.

பகுதி இ — ($5 \times 8 = 40$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16. (அ) சங்க இலக்கியங்களில் காணலாகும் அகப்புறக் கோட்பாடுகளை விவரி.

(அல்லது)

(ஆ) சங்க இலக்கியங்கள் வழி தமிழர் வாழ்வியலை ஆய்க.

17. (அ) தோழியின் அறிவாற்றலை நற்றிணை வழி ஆய்க.

(அல்லது)

(ஆ) பருவங்கண்டு தலைவி உரைத்த செய்திகளை குறுந்தொகை வழி தொகுத்துரைக்க.

18. (அ) அகநானூற்று நெய்தல் பாடல்கள் கூறும் செய்திகளை ஆய்க.

(அல்லது)

(ஆ) குறிஞ்சிக்கலியில் வருணனை அமைந்துள்ள விதத்தினை விளக்குக.

19. (அ) பாண்டிய நெடுஞ்செழியனது சிறப்புகளை விவரித்து எழுது.

(அல்லது)

(ஆ) பதிற்றுப்பத்தில் எட்டாம்பத்து — பாடல்களின் தலைப்புப் பொருத்தத்தினை ஆய்க.

20. (அ) குறிஞ்சிப்பாட்டின் வாயிலாக தமிழர் பண்பாட்டினை விளக்குக.

(அல்லது)

(ஆ) நல்லியக்கோடனின் பண்பு நலனை விவரிக்க.